உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# தமிழறிவோம்!

புலவர் வெற்றியழகன், சென்னை.

தொடர்-2

"தமிழ்மொழி இனிமையானது;
வளமையானது!
அழகு மிகுந்தது;
வலிமை வாய்ந்தது!
மிகவும் பண்பட்டு விளங்குவது
தமிழ்மொழி மட்டுமே!"

- இராபர்ட்டு தெ நொபிலி

## தமிழ்மொழி

உலகில் ஏழாயிரம் மொழிகள் தோன்றி நாலாயிரம் மொழிகள் அழிந்து - இன்று மூவாயிரம் மொழிகள் இருக்கின்றன. இவை அனைத்துக்கும் மேலான - சிறந்த மொழி தமிழ்தான்.

தமிழ் - என்னும் சொல்லில் மூன்று எழுத்துகளே இருப்பினும் - அவற்றுள் தமிழ் மொழியே அடங்கியுள்ளது. த்-வல்லினம், ம்-மெல்லினம், ழ்-இடையினம் என்னும் மூன்று இனமும்; த்+அ=த-அ, ம்+இ=மி-இ ஆகிய உயிரினமும், த்-ம்-ழ் ஆகிய மெய்யெழுத்துகளும்; அ, இ ஆகிய உயிரினமும் ஆக-வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம், மெய்யெழுத்து, உயிரெழுத்து ஆகியற்றுடன் த, மி ஆகிய உயிர்மெய்யெழுத்துகளும் தமிழ் -த்+ம்+ழ். த்+அ=த-அ; ம்+இ=மி-இ ஆகிய உயிர்க்குறில் எழுத்துகளும்; தமி+ழ்+உ=தமிழு என்றும், தமிழ் என்னும் சொல்லில் தமிழ்மொழியே அடங்கியுள்ளது. தமிழ் என்னும் சொல்லுக்குச் சங்க இலக்கியங்களில் மொழி, நாடு, மக்கள் என்னும் பொருளில் அடங்கியுள்ளது.

மொழி - **"தமிழ்கெழு கூடல்" என்று புறநானுனூறு (58),**
**"நற்றமிழ் முழுதறிதல்" புறநானூறு (50)** ஆகியவை தெரிவிக்கின்றன.

நாடு - **“தண்டமிழ்க் கிழவர்” (புறம்-35:3)**

**“தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்” (புறம்-50-10)**

**“தமிழ்கெழு மூவர்” (அகம்-31:14)**

மக்கள் – **“தமிழ் தலைமயங்கிய தலையாலங்கானம்” (புறம்-19-2) “கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறிந்து” (பட்டினப்பாலை-63- 9)** என்று தமிழ் என்னும் தூய சொல்லுக்குப் பொருள் கூறுகின்றன சங்க நூல்கள்.

“மொழி - தம் மொழி - என்றனர். தம் மொழி - த மொழியாகித் தமிழ்யாகித் தமிழ் என்று நிலைத்துத் தமிழுக்குள்ளேயே மொழி என்பதுவும், உட் செறிவார்ந்து உள்ளமையே உணரமுடியாதவாறு-பழமையைப் பெற்றுள்ளது. அறியாத நாம் மறுபடியும் தமிழ் என்பதனுடன்–மொழி என்னும் சொல்லைக் கூட்டித் ‘தமிழ் மொழி’ என்கிறோம்”. என்று மொழி ஆய்வு அறிஞர் ப. சுருளி கூறியுள்ளார்.

தமிழ்+அம்=தமிழும். த்ரமிள - த்ரமிட - திரவிட - திராவிட - திராவிடம் என்று ஆனது என்றும் அறிஞர் ப.சுருளி கூறுகின்றார்.

திராவிடம் வேறு; தமிழ் வேறு; இரண்டும் தமிழ்ச் சொல்லே என்பது எனது கூற்று. ஊர்களில்–சிற்றூர்களில் “நெல்லைத் திராவு” என்பர். திராவு என்பதற்குப் பரப்பு-பரவலாக்கு என்று பொருள். திராவுதல்-பரவலாக்குதல், பரவுதல், பரந்து விரிதல், பரந்திருத்தல். திராவு+இடம்-திராவிடம். திராவிடம்-பரந்த இடம், பரந்தஇடம்-தமிழகம், தென்னகம், நாவலந் தீவு, நானிலம். திரு+இடம்=திருவிடம். திரவிடம் - திராவிடம் ஆனது என்றும் கூறலாம்.

கால்டுவெல் – தமது “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்னும் நூலின் – முன்னுரையில் குமாரிலபட்டர் “திராவிட-ஆந்திர பாஷா” என்று கூறியுள்ளார். ஆனாலும் திராவிட என்பது சமற்கிருதமே என்னும் முடிவுக்கே வந்துள்ளார் கால்டுவெல். கால்வெல்லுக்கு முன்னதாக எல்லீசர் தமிழ் மொழியைச் செம்மொழி என்று கூறியுள்ளார்.

**“ இனிமையும் நீர்மையும்**
**தமிழெனல் ஆகும்”**

என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. தமிழ் என்பதற்கு இனிமை, நீர்மை(தன்மை) என்று அகராதியும் கூறுகின்றது. தமிழ் என்றால் இனிமை. தமிழிலிருந்து பிறந்த தெலுங்கு, கன்னடம் இவையும் இனிமையே. தெலுங்கு மொழியில் தெனுகு என்றால் தேன் என்றுதான் பொருள். தெனுகு என்பதுவே தெலுகு - தெலுங்கு என்று மருவி வழங்கப்பெறுகின்றது. கன்னல் என்றால் கரும்பு. கன்னல்+அம்=கன்னலம் ஆகிப் பின்பு கன்னடம் என்று மருவி வழங்கப்பெறுகிறது.

## தெலுங்கு

தமிழினின்று பிறந்த மொழி தெலுங்கு. அது கி.மு.1500 இல் திரிந்து பிறந்தது. திரிலிங்கம் என்பதுவே திரகலிங்கம் ஆகித் தெலுங்கு ஆனது. தெலுங்குக்கு இலக்கண நூல் சமற்கிருதத்தில்தான் உள்ளது.

## கன்னடம்

கருநடம் என்பதுவும் கன்னடம் ஆகலாம். முதலில் நாட்டையும் பிறகு மொழியையும் குறித்தது. கருநாடகம் என்பது பழைய வழக்கு; அதுவே சரியானதுவும். சமற்கிருதக்காரர் “கர்நாடகம்” என்று திரித்துக்கொண்டனர். கருநாடகம் என்பதற்குக் கரிய நிலம்-கருங் கூத்து; கரிசல் பாங்கான பகுதி –நிலம்-நாடு. கன்னட மொழிக்கும் இலக்கணம் சமற்கிருதத்தில்தான் உள்ளது.

## மலையாளம்

மலைசூழ்ந்த பகுதியிலிருந்து உருவான மொழி என்பது தான் மலையாளம் என்பது. சேர நாடுதான் – சேரம்-சேரளம் என்று ஆகி- அதுவே கேரளம் என்று மருவியது.

சேரன் - சேரல் - சேரலன் - கேரலன் - கேரளன் – கேரளம் என்றும் மருவியது. நாளி கேரம் தேங்காய். தேங்காய் மிகுதியாக விளையும் நாடு என்னும் பொருளில் வந்தது என்பது பொருந்தாது. கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை சேரநாடு செந்தமிழ் நாடாகவே இருந்தது. கி.பி. 1320 இல் வீரராகவ சக்கரவர்த்தி பொறித்த கோட்டயம் செப்பேடு மலையாளம் கலந்த தமிழாகவே இருக்கிறது. கி.பி 1860 இல்தான் முதல் மலையாள மொழிக்கு இலக்கண நூல் தோன்றியுள்ளது. மலையாள மொழிக்கு இலக்கண நூல் சமற்கிருத்தில்தான் இருக்கிறது.

## தமிழின் தகுதிகள்

ஒரு மொழி செம்மொழி என்னும் தகுதி பெறுவதற்குப் பதினோரு தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும் என்பர். அவை, 1.தொன்மை, 2.தனித்தன்மை, 3. பொதுப் பண்பு, 4. நடுவு நிலைமை, 5. தாய்மைத் தன்மை, 6. பண்பாடு பட்டறிவு வெளிப்பாடு, 7. பிறமொழித் தாக்கமிலாத் தனித்தன்மை, 8. இலக்கிய வளம், 9. உயர் சிந்தனை, 10. கலை இலக்கியத் தனித்தன்மை, 11. மொழிக்கோட்பாடு என்று இந்த பதினோரு தகுதிகள் இருந்தாற் போதும் என்று கூறுகின்றனர். ஆனால், தமிழ் மொழிக்கு மேலும் 12. இடையறாத் தொடர்ச்சி, 13. பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு, 14. ஒலிக் கோட்பாடு எனப் பதினான்குக்கும் மேலான தகுதிப்பாடுகள் தமிழ்மொழிக்கு வாய்த்திருக்கின்றன.

## செவ்வியல் மொழி

பதினொரு தகுதிப்பாடுகள்-அதற்கும் குறைவான தகுதிப் பாடுகள்தாம் வேறு மொழிகளுக்கு இருக்கின்றன. ஆனால், தமிழ் மொழிக்கு அவற்றைவிட மேலான தகுதிப்பாடுகள் வாய்க்கப் பெற்றிருந்தும் “செவ்வியல் மொழி” என்கின்ற மய்ய அரசின் தகுதிப்பாட்டினைப் பெறுவதற்காக நூறாண்டுகள் போராடவேண்டிய சூழ்நிலை இருந்தது.

எல்லீசர் தொடங்கி-கால்டுவெல் தொட்டு- பரிதிமாற் கலைஞர் தொடர்ந்து-பிறகு-தமிழ் அமைப்புகள், பல்வேறு கட்சிகள் என்று போராடிய பிறகே 12.10.2004 இல் தமிழ் செம்மொழி என்று மய்ய அரசால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

இந்திய-மய்ய அரசால் செம்மொழிப் பட்டியலில் முதலாவதாகப் பதியப்பெற்றது நம் தாய்மொழியாகிய தமிழ்மொழிதான். அதன் பிறகே 2005 ஆம் ஆண்டில் இரண்டாவது செம்மொழியாகச் சமற்கிருதம் பதியப் பெற்றது. 2008 இல் கன்னடமும் தெலுங்கும் பதியப்பெற்றது. 2014 இல் ஒரியா பதியப் பெற்றது.

உலக மொழிகளுள் செம்மொழிகளாகத் தமிழ், கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், சீனம், சமற்கிருதம் இவற்றையே ஏற்றிருந்தனர் மொழியறிஞர். இப்பொழுது இந்திய மொழிகளுள் கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒரியா ஆகிய இந் நான்கு மொழியும் செம்மொழியாக ஏற்கப்பெற்றுள்ளன. அப்படியானால் இப்பொழுது செவ்வியல் மொழி என்றால் பத்து மொழிகள் என்றுதான் எழுதல் வேண்டும்; பேசுதல் வேண்டும்.

### தமிழ் மொழியின் ஆற்றல்

எகிப்து மொழி தோன்றிப் பத்தாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அதுவும் எபிரேயமும் மறைந்துவிட்டன. ஆனால், எபிரேய மொழியினை மீண்டும் வளர்த்தெடுத்துள்ளனர். இலத்தீனம், கிரேக்கம் ஆகிய இவையும் அழிந்துவிட்டன. இலக்கியங்களை வளர்த்த மொழிகளே இருக்கின்ற இடம் தெரியாமல் போய்விட்டன. ஆனாலும், தமிழ்மொழி இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. தனித்து இயங்கிக்கொண்டிருக்கின்றது.

“தமிழினிடம் ஓர் இயற்கை ஆற்றல் இருக்கின்றது. இந்த ஆற்றல் இருக்கும்வரையில் தமிழை யாராலும் அழிக்க முடியாது.” என்று தனித் தமிழ்த் தந்தை மறைமலையார் “தமிழின் தனிச் சிறப்பு” என்னும் நூலில் கூறியுள்ளார்.

உலக மொழிகள் 3000க்கும் மேல் உள்ளன. அவற்றுள் அய்ந்து கோடி மக்கள் பேசுகின்ற மொழிகள் பதிமூன்று இருக்கின்றன. நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியினைப் பத்துக்கோடிப்பேர் பேசுகின்றனர். ஒரு கோடிப்பேர் பேசுகின்ற மொழிகள் உலகில் அறுபது இருக்கின்றன.

சீன வானொலி நாற்பத்து மூன்று மொழிகளில் ஒலி பரப்புகின்றது. அவற்றுள் இந்திய மொழிகளில் தமிழிலும் இந்தியிலும் மட்டுமே ஒலிபரப்புகின்றது.

இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனில் உள்ள பி.பி.சி. வானொலி உலக மொழிகள் பலவற்றில் ஒலிபரப்புகின்றது. இந்திய மொழிகளுள் தமிழிலும், இந்தியிலுமே ஒலிபரப்புகின்றது.

யுனெசுகோ கூரியர் இதழ் உலக மொழிகளாகிய முப்பது மொழிகளில் வெளிவந்தது. இந்திய மொழிகளில் தமிழிலும் இந்தியில் மட்டுமே வந்து கொண்டிருந்தது. இதிலிருந்து தமிழ்மொழிக்குள்ள சிறப்பினை நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

“சீன மொழியோ, பழைய மொழியாக இருப்பினும், சித்திர எழுத்தை அடிப்படையாகக் கொண்டது. மனித இயல்புகளையும் சிந்தனைகளையும் எண்ணியாங்கு நூட்பமாக வெளிப்படுத்த இயலவில்லை”.

“மனிதச் சிந்தனைகளை, உணர்வின் நுட்பங்களை-தெளிவாக-அழுத்தந் திருத்தமாக வெளிப்படுத்தும் ஆற்றல் தமிழுக்கு மட்டுமே உண்டு.”

“செம்மொழிகள் என்று கூறப்பெறும் வேறு எந்த மொழிக்கும் அந்த ஆற்றல் இல்லை.” என்று அமெரிக்காவைச் சேர்ந்த மொழி ஆய்வு அறிஞர் எமனோ இவ்வாறு கூறுகின்றார். “சப்பானிய மொழிச் சொல்லுக்கும் தமிழ்ச் மொழிச் சொல்லுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றது” என்று சப்பானிய நாட்டுத் தமிழறிஞர் சுசுமு ஓனோ என்றவர் தெரிவித்துள்ளார்.

உலக முதல் நிலம்; கன்னியாகுமாரிக்குத் தெற்கே 2500 கிலோ மீட்டர் கடலுள் மூழ்கிய கண்டம்; உலக முதல் மாந்தர் தமிழன்; அவன் பேசிய மொழியே தமிழ்மொழி. அந்தத் தமிழ்தான் உலக முதன்மொழி தமிழ்தான் பாட்டன்-பாட்டி மொழி. தமிழ்மொழி இந்திய மொழிகளின் தாய்; உலக மொழிகளுக்கெல்லாம் வேராக உள்ளது.

உலக மொழிகளுள் 800 மொழிகள் மட்டுமே எழுத்து வடிவங் கொண்டவை. அதுவும் தனக்கென்று தனி வடிவம் கொண்டவை. தமிழ் தனக்கென்று தனி வடிவம் கொண்டது. களி மண்ணில் எழுதும்போது ஒரு வடிவம்; மணலில் எழுதும்போது ஒரு வடிவம்; ஓலையில் எழுதும்போது ஒருவடிவம்; ஈய எழுத்தில் இருந்தபோது ஒருவடிவம் என்று காலத்துக் கேற்ற எழுது பொருளுக்கு ஏற்ற – காலத்துக்கு கேற்ற வடிவம் என்று பல்வேறு காலங்களில்-பல்வேறு நிலைகளில் பல்வேறு வடிவங்களைப் பெற்று வென்று நிற்கிறது.

கணினியில் – உலகில் – ஆங்கிலத்துக்கு அடுத்த நிலையில் அதாவது, இரண்டாவது இடத்தினைப் பெற்றுச் சிறக்கின்றது. அதனால்தான் “தமிழ்மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்” பதினாறு பண்புப் பெயரினைச் சுட்டியிருக்கின்றார் தமிழ்மொழிக்கு. அவை, 1. தொன்மை, 2. இயன்மை, 3. தூய்மை, 4. தாய்மை, 5. முன்மை, 6. வியன்மை, 7.வளமை, 8. மறைமை, 9. எண்மை, 10. இளமை, 11. இனிமை, 12. தனிமை, 13. ஒண்மை, 14. இறைமை, 15. அம்மை, 16. செம்மை என்று அருமையான பெயரினைச் சுட்டியுள்ளார் தமிழ்மொழிக்கு.

**(தொடரும்.......)**

utsmdu2@gmail.com